ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 11,478 — 1958 අගෝස්තු 20 වැනි බදාදා — 20.8.1958

11,478 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 20 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. எவ். சி./வி. எஸ். 7 (2) மாட்டிறைச்சி.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் 3(2) ம் பிரிவினாலும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் தத்துவங்களைக் கொண்டு கொழும்பு மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு), சத்திரசிங்ககே டொன் சுகததாச ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஆடி மாதம் 7 ம் திகதி எவ். சி./வி. எஸ். 7 (1) என இலக்கமிடப்பட்டு அன்றைய 11,416 ம் இலக்க அதிவிசேஷ இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைக் கட்டுப்பாட்டுக் கட்டளையை இன்று தொடக்கம் நீக்கி விடுகின்றேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே அப்பத்திகளின் தலைப்பில் விபரிக்கப்பட்டிருக்கும் ரக நாட்டு மாட்டிறைச்சிக்கு ஒரு இருத்தலுக்கு ஆகக் கூடிய விலைகள் என்றும் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள் இந்த விலைகளுக்கு மேலாக நாட்டு மாட்டிறைச்சி விற்கப்படக்கூடாது என்றும் ஆஞ்ஞையிடுகின்றேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) நாட்டு மாட்டிறைச்சி என்பது வளர்க்கப்பட்ட இந்திய அல்லது சிங்கள மாட்டின் அல்லது எருமையின் கழிவு உறுப்புக்கள் தவிர்ந்த சதை எனக் பொருள்படும்படி விதிக்கின்றேன்.

(ஆ) மிருகங்கள் வெட்டப்படும் இடத்தில் விற்பனைக்காக தயார் செய்தபடி எந்த மிருகத்தின் உடலும் (அதாவது தலை, தோல், குடல், குரை, குளம்பு மற்றும் வழக்கமாக கழிக்கப்படும் உறுப்புக்கள் புறநீங்கலாக) விற்கப்பட்டால் அவ்விற்பனை பருமட்ட நிறையின்படி விற்றதாகக் கருதப்படும்.

(4) எலும்புடன் நாட்டு மாட்டிறைச்சி விற்கப்பட்டால் அவ்விதம் விற்கப்படும் எலும்புகளின் நிறை விற்கப்பட்ட மொத்த நிறையின் 25 சத வீதத்திற்கு மேற்படக் கூடாது என விதிக்கின்றேன்.

(5) இதனோடிருக்கும் அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் எவ்விடத்திலாவது அட்டவணையில் விபரிக்கப் பட்டிருக்கும் ரக நாட்டு மாட்டிறைச்சி விற்பனைக்காக வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அந்த இடத்தில் இக்கட்டளையால் விதிக்கப்பட்டிருக்கும் ஆகக் கூடிய விலைகள் அடங்கிய ஒரு அறிவித்தல் பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்க வேண்டும் என விதிக்கின்றேன்.

(6) நாட்டு மாட்டிறைச்சி, அதற்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட குடில்களிலேயே விற்கப்படவோ அல்லது விற்பனைக்காக வைக்கப் படவோ வேண்டுமெனவும் அக்குடில்களில் வேறு எந்த ரக இறைச்சியும் விற்கப்படவோ அல்லது விற்பனைக்காக வைக்கப்படவோ கூடாது எனவும் விதிக்கின்றேன்.

(7) இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் பகுதியில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள் எந்த இடத்திலாவது அட்டவணையில் விபரித்திருக்கும் ரக நாட்டு மாட்டிறைச்சி வைத்திருக்கும் எந்த வியாபாரியும் வியாபாரம் செய்யும் இடத்தில் இன்ன ரக நாட்டு மாட்டிறைச்சி மட்டுமே விற்கப்படும் எனக் குறிப்பிடும் ஒரு அறிவித்தல் பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்க வேண்டும் என விதிக்கின்றேன்.

(8) நாட்டு மாட்டிறைச்சியும் கழிவு உறுப்பும் சேர்த்து ஒரு முறையில் விற்கப்படின் நாட்டு மாட்டிறைச்சி தனியாக நிறுக்கப்பட்டு புறம்பாக விற்கப்படவேண்டுமென விதிக்கின்றேன்.

(9) ஒவ்வொரு வியாபாரியும் நாட்டு மாட்டு இறைச்சி விற்கும்போது உபயோகப்படுத்தும் தராசுகளை, வாங்குபவர் பார்வையிட்டு வாங்கும் நாட்டு மாட்டு இறைச்சியின் உண்மை நிறையை சுலபமாக அறிந்துகொள்ளும் விதமாக, வைக்கவேண்டுமென விதிக்கின்றேன்.

(10) இதனோடிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் நாட்டு மாட்டிறைச்சி விற்பனை செய்யும் ஒவ்வொரு வியாபாரியும், நாட்டு மாட்டிறைச்சி வாங்குபவர் கேட்குமிடத்து, கீழ்வரும் விபரங்கள் அடங்கிய பற்றுச்சீட்டு கொடுக்க வேண்டும் என விதிக்கின்றேன்.

(அ) விற்ற திகதி ;
(ஆ) விற்ற நாட்டு மாட்டிறைச்சியின் அளவு (நிறையில்) ;
(இ) விற்ற நாட்டு மாட்டிறைச்சியின் விபரம் ;
(ஈ) விற்ற நாட்டு மாட்டிறைச்சியின் அளவுக்கு கொடுக்கப்பட்ட விலை.

(11) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை விதிக்கப்பட்ட எல்லைக்குள் எவரும் இதனோடிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களை வேறு எந்த இறைச்சியோடோ அல்லது சதையோடோ கலந்து விற்கக்கூடாது என விதிக்கின்றேன்.

(12) இதனோடிருக்கும் அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் பொருட்கள் விற்கப்படும் போது அவற்றை சுற்றிக் கொடுக்க உறைகளோ அல்லது வைத்துக் கொடுக்க ஏதாவது கொள்கலன்களோ உபயோகிக்கப்பட்டால் அவற்றின் விலையும் இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் குறிக்கப்பட்டிருக்கும் ஆகக்கூடிய விலைகளுக்குள் அடங்க வேண்டுமென விதிக்கின்றேன்.

(13) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்பட வேண்டும் என விதிக்கின்றேன்.

1958 ம் ஆண்டு ஆவணித் திங்கள் 20 ம் நாள் மு.ப. 8 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எஸ். டி. சுகததாச,
உதவி விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
கொழும்பு மாவட்டம்.

## அட்டவணை

### நாட்டு மாட்டிறைச்சிக்கு ஆகக்கூடிய விலை

| பத்தி 1<br>பகுதிகள் | பத்தி 2<br>நாட்டு மாட்டிறைச்சி (எலும்பில்லாமல்) 1 இருத்தலுக்கு ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | த்தி 3<br>நாட்டு மாட்டிறைச்சி (எலும்புடன்) 1 இருத்தலுக்கு ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>நாட்டு மாட்டிறைச்சி (பரிமாண நிறை) 1 இருத்தலுக்கு ஆகக் கூடிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1. ஹூப்பிற்றிக்கம் கோறளை, அளுத்குறு கோறளை வடக்கு (A), அளுத்குறு கோறளை வடக்கு (B), அளுத்குறு கோறளை தெற்கு, சியானக் கோறளை (அதிகாரபற்று), சியானக் கோறளை (மெடபற்று), ஹேவகம் கோறளை, சல்பிற்றி கோறளை (மொறட்டுவை நகர சபைப் பகுதி நீங்கலாக) .. | 0 80 .. | 0 65 .. | 0 55 |
| 2. மொறட்டுவை நகரசபைப் பகுதி .. | 0 90 .. | 0 75 .. | 0 65 |
| 3. கொழும்பு காரியாதிகாரியின் பகுதி (கொழும்பு மியுனிசிப்பல் பகுதியும் தெகிவலை, மௌன்ற் லவினியா பகுதியும் நீங்கலாக) .. | 0 80 .. | 0 65 .. | 0 55 |
| 4. தெஹிவலை, மௌன்ற்லவினியா நகரசபைப் பகுதி | 0 95 .. | 0 80 .. | 0 70 |

---

உணவு விலைக்கட்டளை இல. எவ்.சி./வீ. எஸ். எவ். 1 (16). **உப உணவுப் பொருட்கள்.**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினும் 3(2) ம் பிரிவினுலும் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு கொழும்பு மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு), சத்திரசிங்க டொன் சுகததாச ஆகிய நான் இக் கட்டளையால் :—

(1) 1958 ம் ஆண்டு ஆடிமாதம் 12 ந் திகதி வெளிவந்த 11,424 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆடி மாதம் 11 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட எவ். சீ./வீ. எவ். 1 (15) என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையை இத்தேதியிலிருந்து எடுத்துவிடுகின்றேன்.

(2) இதனோடு இருக்கும் அட்டவணை " அ " வில் 2 தொடக்கம் 14 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களின் விலைகளையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரிக்கு விற்கும் ஆகக் கூடிய மொத்த விலைகளாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். குறித்த அட்டவணையிலுள்ள பொருட்களை அதே அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் இந்த விலைகளுக்குக் கூடுதலாக விற்கலாகாது.

(3) இதனோடு இருக்கும் அட்டவணை " ஆ " வில் 2 தொடக்கம் 14 வரையுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களின் விலைகளையே நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி பாவிப்பாளர்களுக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலைகளாக உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். குறித்த அட்டவணையில் உள்ள பொருட்களை அதே அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் இந்த விலைக்குக் கூடுதலாக விற்றலாகாது.

(4) இந்த அட்டவணையின் நோக்கத்திற்காக :

(அ) அட்டவணைகள் " அ " விலும் " ஆ " விலும் 2 தொடக்கம் 14 வரையிலும் உள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களில் எத்தொகையையாவது திருப்பிவிற்பதற்காக விற்றல் அல்லது ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அறியக்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும்.

(ஆ) குறித்த அட்டவணைகளில் 2 தொடக்கம் 14 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை மொத்த அந்தர் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும்.

(5) குறித்த அட்டவணையில் 2 தொடக்கம் 14 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்ட எப்பொருட்களையேனும் வேறொரு பொருளோடு கலந்து 1 ம் பத்தியில் குறிக்கப்பட்ட எல்லைக்குள் விற்றலாகாது என ஆஞ்ஞை யிடுகின்றேன்.

(6) குறித்த அட்டவணைகளில் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள 2 தொடக்கம் 14 வரை எல்லைக்குள் உள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டுள்ள எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் அப்பொருளுக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றை பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகின்றேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகின்றேன்.

(8) குறித்த அட்டவணைகளில் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் 2 தொடக்கம் 14 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் எதாவது ஒரு பொருளை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்கு பின் வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகின்றேன்.

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்கப்பட்ட பொருளின் அளவு (நிறை) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(9) குறித்த அட்டவணைகளில் 2 தொடக்கம் 14 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்ட எதாவதொரு பொருள் விற்கப்படும் இடத்து அப்பத்திகளில் குறிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளை சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகின்றேன்.

1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 20 ந் திகதி மு.ப. 8 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

எஸ். டீ. சுகததாச,
உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு).
கொழும்பு மாவட்டம்.

அட்டவணை " அ "

மொத்த வியாபாரி மொத்த அத்தர் ஒன்றை சில்லறை வியாபாரிக்கு விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 | பத்தி 5 | பத்தி 6 | பத்தி 7 | பத்தி 8 | பத்தி 9 | பத்தி 10 | பத்தி 11 | பத்தி 12 | பத்தி 13 | பத்தி 14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எல்லைகள் | வெண்காயம் ஈர வெண் காயம் தவிர்ந்த ஏனைய ரகங்கள் | மல்லி | சீரகம் | மிளகாய் | பாசிப் பயறு | முழு உளுந்து | கடலைப் பருப்பு | மைசூர்ப் பருப்பு | ஈரவெண் காயம் | உருளைக் கிழங்கு | மாசி | கடுகு | உப்பு |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. ஹப்பிற்றிகம் கோரளை .. | 21 35 .. | 41 97 .. | 123 87 .. | 78 72 .. | 47 22 .. | 49 08 .. | 41 76 .. | 62 97 .. | 26 70 .. | 30 70 .. | 258 27 .. | 72 97 .. | — |
| 2. அளுத்குறு கோறளை வடக்கு (A) .. | 21 09 .. | 41 71 .. | 123 61 .. | 78 46 .. | 46 96 .. | 48 82 .. | 41 50 .. | 62 71 .. | 26 44 .. | 30 44 .. | 258 01 .. | 72 71 .. | — |
| 3. அளுத்குறு கோறளை வடக்கு (B) .. | 21 03 .. | 41 65 .. | 123 55 .. | 78 40 .. | 46 90 .. | 48 76 .. | 41 44 .. | 62 65 .. | 26 38 .. | 30 38 .. | 257 95 .. | 72 65 .. | — |
| 4. அளுத்குறு கோறளை தெற்கு .. | 20 83 .. | 41 45 .. | 123 35 .. | 78 20 .. | 46 70 .. | 48 56 .. | 41 24 .. | 62 45 .. | 26 18 .. | 30 18 .. | 257 75 .. | 72 45 .. | — |
| 5. சியானக் கோறளை கிழக்கு .. | 21 15 .. | 41 77 .. | 123 67 .. | 78 52 .. | 47 02 .. | 48 88 .. | 41 56 .. | 62 77 .. | 26 50 .. | 30 50 .. | 258 01 .. | 72 77 .. | — |
| 6. சியானக்கோறளை மேற்கு (அதிகார பற்று) .. | 20 81 .. | 41 43 .. | 123 33 .. | 78 18 .. | 46 68 .. | 48 54 .. | 41 22 .. | 62 43 .. | 26 16 .. | 30 16 .. | 257 67 .. | 72 43 .. | — |
| 7. சியானக் கோறளை மேற்கு (மெடபற்று) .. | 20 91 .. | 41 53 .. | 123 43 .. | 78 28 .. | 46 78 .. | 48 64 .. | 41 32 .. | 63 53 .. | 26 26 .. | 30 26 .. | 257 77 .. | 72 53 .. | — |
| 8. ஹேவகம் கே றளை .. | 20 99 .. | 41 61 .. | 123 51 .. | 78 36 .. | 46 86 .. | 48 72 .. | 41 40 .. | 62 61 .. | 26 34 .. | 30 34 .. | 257 85 .. | 72 61 .. | — |
| 9. சல்பிற்றிக் கோறளை .. | 20 91 .. | 41 53 .. | 123 43 .. | 78 28 .. | 46 78 .. | 48 64 .. | 41 32 .. | 62 53 .. | 26 26 .. | 30 26 .. | 257 77 .. | 72 53 .. | — |
| 10. கொழும்பு நகர் தவிர்ந்த் கொழும்பு காரியாதி காரியின் பிரிவு .. | 20 75 .. | 41 37 .. | 123 27 .. | 78 12 .. | 46 62 .. | 48 48 .. | 41 16 .. | 62 37 .. | 26 10 .. | 30 10 .. | 257 69 .. | 72 37 .. | — |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும் ; இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

அட்டவணை " ஆ "

சில்லறை வியாபாரி நிகர் இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக் கூடிய சில்லறை விலை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 | பத்தி 5 | பத்தி 6 | பத்தி 7 | பத்தி 8 | பத்தி 9 | பத்தி 10 | பத்தி 11 | பத்தி 12 | பத்தி 13 | பத்தி 14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எல்லைகள் | வெண்காயம் ஈர வெண் காயம் தவிர்ந்த ஏனைய ரகங்கள் | மல்லி | சீரகம் | மிளகாய் | பாசிப் பயறு | முழு உளுந்து | கடலைப் பருப்பு | மைசூர்ப் பருப்பு | ஈரவெண் காயம் | உருளைக் கிழங்கு | மாசி | கடுகு | உப்பு |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. ஹப்பிற்றிகம் கோரளை .. .. | 0 23 .. | 0 41 .. | 1 21 .. | 0 76 .. | 0 46 .. | 0 48 .. | 0 41 .. | 0 61 .. | 0 29 .. | 0 32 .. | 2 51 .. | 0 71 .. | 0 06 |
| 2. அளுத்குறு கோறளை வடக்கு (A) .. | 0 23 .. | 0 41 .. | 1 21 .. | 0 76 .. | 0 46 .. | 0 48 .. | 0 41 .. | 0 61 .. | 0 29 .. | 0 32 .. | 2 51 .. | 0 71 .. | 0 06 |
| 3. அளுத்குறு கோறளை வடக்கு (B) .. | 0 23 .. | 0 41 .. | 1 21 .. | 0 76 .. | 0 46 .. | 0 48 .. | 0 41 .. | 0 61 .. | 0 29 .. | 0 32 .. | 2 51 .. | 0 71 .. | 0 06 |
| 4. அளுத்குறு கோறளை தெற்கு .. .. | 0 23 .. | 0 41 .. | 1 21 .. | 0 76 .. | 0 46 .. | 0 48 .. | 0 41 .. | 0 61 .. | 0 29 .. | 0 32 .. | 2 51 .. | 0 71 .. | 0 06 |
| 5. சியானக் கோறளை கிழக்கு .. | 0 23 .. | 0 41 .. | 1 21 .. | 0 76 .. | 0 46 .. | 0 48 .. | 0 41 .. | 0 61 .. | 0 29 .. | 0 32 .. | 2 51 .. | 0 71 .. | 0 06 |
| 6. சியானக்கோறளை மேற்கு (அதிகார பற்று) .. | 0 23 .. | 0 41 .. | 1 21 .. | 0 76 .. | 0 46 .. | 0 48 .. | 0 41 .. | 0 61 .. | 0 29 .. | 0 32 .. | 2 51 .. | 0 71 .. | 0 06 |
| 7. சியானக் கோறளை மேற்கு (மெடபற்று) .. | 0 23 .. | 0 41 .. | 1 21 .. | 0 76 .. | 0 46 .. | 0 48 .. | 0 41 .. | 0 61 .. | 0 29 .. | 0 32 .. | 2 51 .. | 0 71 .. | 0 06 |
| 8. ஹேவகம் கோறளை .. .. | 0 23 .. | 0 41 .. | 1 21 .. | 0 76 .. | 0 46 .. | 0 48 .. | 0 41 .. | 0 61 .. | 0 29 .. | 0 32 .. | 2 51 .. | 0 71 .. | 0 06 |
| 9. சல்பிற்றிக் கோறளை .. .. | 0 23 .. | 0 41 .. | 1 21 .. | 0 76 .. | 0 46 .. | 0 48 .. | 0 41 .. | 0 61 .. | 0 29 .. | 0 32 .. | 2 51 .. | 0 71 .. | 0 06 |
| 10. கொழும்பு நகர் தவிர்ந்த கொழும்பு காரியாதி காரியின் பிரிவு .. | 0 22 .. | 0 40 .. | 1 20 .. | 0 75 .. | 0 45 .. | 0 47 .. | 0 40 .. | 0 60 .. | 0 28 .. | 0 31 .. | 2 50 .. | 0 70 .. | 0 06 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆக்கூடிய** விலைகளாகும் ; இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.